Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

12 ரமலான் 1438 ஹிஜ்ரி கமரி 8 இஹ்ஸான் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

8 ஜூன் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து–லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## உண்மையான மகிழ்ச்சியின் உறைவிடம் இறைவனேயாவான்

**நீங்கள் அவனிடம் உதவி தேடாவிடில் அவனது ஆற்றலின் துணையை வேண்டக்கூடிய பழக்கம் உங்களில் காணப்படாவிடில் நீங்கள் எவ்வித வெற்றியும் பெற மாட்டீர்கள். இறுதியில் நீங்கள் பரிதாபகரமாய் மரணமடைவீர்கள். உங்களது இறைவன் உங்களின் எல்லா திட்டங்களுக்கும் உத்திரமாக இருக்கின்றான். உத்திரம் விழுந்து விட்டால் கம்புகளும் சட்டங்களும் கூரையில் நிலைத்திருக்க முடியுமா? ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது. உடனே அவை மொத்தமாக விழுந்து விடும். இதனால் பலர் மரணிக்கலாம்.**

### வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

உங்களின் ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு கஷ்ட நஷ்டங்களிலும் வேறு வழி முறைகளை நீங்கள் கடைபிடிப்பதற்கு முன் உங்கள் (அறைக்) கதவை அடைத்து விட்டு, இறைவா ! எங்களுக்கு வந்திருக்கும் இக்கஷ்டங்களை நீ உனது கருணையால் நீக்கியருள்வாயாக என்று இறைவன் முன்பு சிரம்பணிய வேண்டும். இந்நிலை உங்களிடையே உருவானால் மட்டுமே நீங்கள் உண்மையானவர்களாக ஆக முடியும். அப்போது பரிசுத்த ஆவியானது உங்களுக்கு உதவி புரியும். மேலும் மறைமுகமாக ஏதேனும் வழியும் உங்களுக்காக திறக்கப்படும்.

நீங்கள் உங்களது ஆன்மாவின் மீது கருணை காட்டுங்கள். எவர்கள் இறைவனோடுள்ள தொடர்பை முற்றிலும் துண்டித்து விட்டு முழுமையாக இவ்வுலகப் பொருட்கள் மீதே சரிந்து விட்டார்களோ, இறைவனிடமிருந்து சந்தியை பெறுவதற்காக வேண்டி இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்) என்று தங்களது வாயால் கூடச் சொல்லாத அவர்களை நீங்கள் ஒருபோதும் பின்பற்றாதீர்கள்.

உங்களது இறைவன் உங்களின் எல்லாத் திட்டங்களுக்கும் உத்திரமாக இருக்கிறான் என்பதனை நீங்கள் அறிந்து கொள்வதற்காக இறைவன் உங்களது கண்களைத் திறப்பானாக. உத்திரம் விழுந்து விட்டால் கம்புகளும் சட்டங்களும் கூரையில் நிலைத்திருக்க முடியுமா ? ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது. உடனே அவை மொத்தமாக விழுந்து விடும். இதனால் பலர் மரணிக்கலாம். இவ்வாறே உங்களது திட்டங்களும் இறைவனது துணை இல்லாமல் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது. ஆகவே நீங்கள் அவனிடம் உதவி தேடாவிடில் அவனது ஆற்றலின் துணையை வேண்டக்கூடிய பழக்கம் உங்களில் காணப்படாவிடில் நீங்கள் எவ்வித வெற்றியும் பெற மாட்டீர்கள். இறுதியில் நீங்கள் பரிதாபகரமாய் மரணமடைவீர்கள். முழுமையானவனும் சக்தியுள்ளவனுமான உங்களது இறைவனை அறியாத பிற சமுதாயத்தினர் எவ்வாறு வெற்றி பெறுகிறார்கள் என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதன் பதிலாவது, அவர்கள் இறைவனைக் கைவிட்ட காரணத்தால் உலகின் சோதனையில் விடப்பட்டிருக்கிறார்கள். இறைவனது சோதனை சில சமயம் இவ்வாறும் உண்டாவதுண்டு. எவர் இறைவனை விட்டு விடுகின்றாரோ, இவ்வுலக இச்சைகளிலும் இன்பங்களிலும் விருப்பம் காட்டுகின்றாரோ, உலகச் செல்வங்கள் மீது மோகங் கொள்கிறாரோ அவருக்காக உலகத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. ஆனால் அவர் ஆன்மீக ரீதியில் வறுமையுடையவரும், ஒன்றுமற்றவருமாவார். இறுதியில் உலக எண்ணங்களிலேயே மரணித்து, அவர் நிரந்தர நரகப் படுகுழியில் தள்ளப்படுகிறார். சில சமயம் இவ்வாறான சோதனையும் உண்டாகிறது. அதாவது, உலக காரியங்களிலும் அவர்கள் தோல்வியை சந்திக்கின்றனர். ஆனால் முதல் சோதனையைப் போல் இச்சோதனை அவ்வளவு அபாயகரமானதல்ல. ஏனெனில் முதல் சோதனையில் போடப்படக்கூடியவர் மிகவும் அகங்காரம் கொண்டவராவார். இருந்தபோதிலும் இந்த இரு பிரிவினரும் 'மஃலூபி அலைஹிம்' என்னும் இறைவனது கோபத்திற்குரியவர்-களாவர். உண்மையான மகிழ்ச்சியின் உறைவிடம் இறைவனேயாவான். எனவே உயிருள்ளவனும், தான் நிலைத்து மற்றவர்களையும் நிலைத்திருக்கச் செய்யக்கூடியவனுமான இறைவனை அறியாதவர்களாகவும், அவனிடம் அலட்சியப் போக்குள்ளவர்களாகவும், அவனை விட்டு முகம் திரும்பக் கூடியவர்களாகவும் இருக்கும் இந்த மக்கள் உண்மையான மகிழ்ச்சியை எவ்வாறு பெற முடியும்? இந்த இரகசியத்தை புரிந்து கொள்ளக் கூடியவரே பெரும் பாக்கியம் பெற்றவராய் இருக்கின்றார். இதனை புரியாதவர் அழிகின்றார்.

இவ்விதமே உலக தத்துவ வாதிகளையும் நீங்கள் பின்பற்றாதீர்கள். அவர்களை மதிப்புக்குரியவர்களென நீங்கள் ஒருபோதும் கருதி விட வேண்டாம். அவை அனைத்தும் அறிவீனங்களாகும். உண்மையான தத்துவ ஞானம் என்பது இறைவன் தனது வசனத்தில் கற்றுக் கொடுத்திருப்பதே ஆகும். இவ்வுலக தத்துவ வாதத்தின் மீது பற்று வைத்தவர்கள் அழிந்து போயினர். எவர்கள் உண்மையான அறிவையும் தத்துவ ஞானத்தையும் திருக்குர்ஆனில் தேடினார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்களாவர். நீங்கள் அறிவீனமான வழிகளை ஏன் மேற்கொள்கிறீர்கள் ? இறைவன் அறியாத விஷயங்களை நீங்கள் அவனுக்கு கற்றுக் கொடுக்கப் போகிறீர்களா ? குருடர்கள் வழி காண்பிப்பார்கள் என்ற எண்ணத்திலா அவர்களைப் பின்பற்றி ஓடுகிறீர்கள் ?

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 123 -வது காதியான் ஆண்டு மாநாட்டை 2017 டிசம்பர் 29, 30 மற்றும் 31 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக ஆயத்தமாகும் பணிகளை செய்ய ஆரம்பித்து விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அல்லாஹ்வுக்காக இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அருள்களைப் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாவதற்காகவும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கு காரணமாக இருப்பதற்கும் சகோதரர்கள் அனைவரும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ். (தலைமைய நாஸிர் இஸ்லாஹே இர்ஷாத், காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**நம்மை அஹ்மதிகள் என்று கூறிக் கொள்கின்ற நாம் நமது தற்காலிக உலக விருப்பங்களையும் இன்பங்களையும் நமது குறிக்கோளாக ஆக்காமல் இருக்கும்போதுதான் உண்மையான அஹ்மதிகளாக இருக்க முடியும்.**

அல்லாஹ் படைத்துள்ள அருட்கொடைகள் நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஆகுமானவையாகும். நிபந்தனை என்னவென்றால், ஆகுமான வழிகளில் அவற்றைப் பெற்றிருக்க வேண்டும். அவை மார்க்கத்தின் வழியிலும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தும் வழியிலும் தடையாக இருக்கக் கூடாது. இறை வணக்கங்களில் தடையை ஏற்படுத்தக் கூடாது.

**உலகைப் பெற்றுக் கொள்வதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்கு தொண்டனாக இருக்கும் வகையில் உலகைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களின் ஒளியில் உலகியல் கேளிக்கை மற்றும் விளையாட்டு, பெருமை அடிப்பது, செல்வங்கள் மற்றும் சந்ததிகள் மூலம் பெருமையைக் காட்டுவது ஆகியவற்றால் பீடிக்கப்படுவதிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் உலக நன்மைகளைப் பெறுவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள முக்கிய போதனைகள்

பாகிஸ்தானிலுள்ள ரஹீம்யார்கான் மாவட்டத்திலுள்ள கான்பூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மது சாஹிப் மற்றும் லாஹூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய பேராசிரியை தாஹிரா பர்வீன் மலிக் சாஹிபா ஆகியோர் ஷஹீதாக்கப்பட்டுள்ளனர். இந்த ஷஹாதத்துகள் பற்றிய நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இரண்டு ஷஹீதுகளின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**5 மே 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **5 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

اِعْلَمُوْٓا اَنَّمَا الْحَيٰوةُ الدُّنْيَا لَعِبٌ وَّلَهْوٌ وَّزِيْنَةٌ وَّتَفَاخُرٌۢ بَيْنَكُمْ وَتَكَاثُرٌ فِي الْاَمْوَالِ وَالْاَوْلَادِ ؕ كَمَثَلِ غَيْثٍ اَعْجَبَ الْكُفَّارَ نَبَاتُهٗ ثُمَّ يَهِيْجُ فَتَرٰىهُ مُصْفَرًّا ثُمَّ يَكُوْنُ حُطٰمًا ؕ وَفِي الْاٰخِرَةِ عَذَابٌ شَدِيْدٌ ۙ وَّمَغْفِرَةٌ مِّنَ اللّٰهِ وَرِضْوَانٌ ؕ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ

இந்த வசனத்தின் பொருள்: மக்களே அறிந்து கொள்ளுங்கள். இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், பொழுதுபோக்கும், அலங்காரத்தைப் பெறுவதற்கும், உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதற்கும், பரஸ்பரம் உங்களுக்கிடையில் செல்வங்கள் மற்றும் சந்ததிகள் மூலம் உங்களது பெருமையைக் காட்டிக் கொள்வதற்குமுள்ள ஒரு வழியாக இருக்கின்றது. இதன் நிலை மழையினால் உருவாகும் வயலைப் போன்றதாகும். அதனால் உற்பத்தியான தாவர வகைகள் விவசாயிகளை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்கின்றது. பின்னர் அது செழித்து வளர்கின்றது. ஆனால், பிறகு அது உலர்ந்து விடுகிறது. இறுதியில் அது மஞ்சள் நிறமாவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது மக்கிப் போன சருகாக ஆகிவிடுகின்றது. மறுமையில் அத்தகைய உலகவாதிகளுக்கு கடினமான தண்டனை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மற்ற சில மக்களுக்கு அல்லாஹ்விடமிருந்து பாவமன்னிப்பும் இறை திருப்தியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றமுள்ள ஓர் தற்காலிக பலனேயாகும். (57:21)

அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் இவ்வுலக வாழ்க்கை பற்றி கவனமூட்டியுள்ளான். இன்னும் சொல்வதென்றால் எச்சரித்துள்ளான். அதாவது இந்த உலகத்தின் வெளிப்படையான வாழ்க்கை, இதன் மூலம் கிடைக்கும் எளிதான நிலைமைகள், இதன் இன்பங்கள், இதன் பொருள், செல்வம் ஆகிய இவை அனைத்தும் தற்காலிகப் பொருள்களேயாகும். இதன் நிலை விளையாட்டு, பொழுதுபோக்கு ஆகியவற்றை விட அதிகமாக வேறொன்றும் இல்லை. அல்லாஹ்விடமிருந்தும் தனது வாழ்வின் நோக்கத்திலிருந்தும் கவனமற்றவனாக இருக்கின்ற மனிதன் இந்தப் பொருள்களின் பக்கமும் இந்த உலக விஷயங்களின் பக்கமும் குனிந்து விடலாம். ஆனால், நம்பிக்கை கொண்ட ஒருவர் – அவர் உயர்வான குறிக்கோள்களை உடையவராக இருக்கவும் வேண்டும் – அவர் இவ்விஷயங்களில் இருந்து மிக மேலானவராக இருக்கின்றார். இவ்விஷயங்களுக்கு அப்பாற்பட்டவராக மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தவாறு அவர் அதைப் பற்றி சிந்திக்கின்றார். உயர்வான நோக்கங்களையும், அல்லாஹ்வின் நெருக்கத்தையும் அவனது அன்பையும் தேடுவதற்கு அவர் முயற்சி செய்கின்றார்.

நாம் இந்தக் காலத்தின் இமாமையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப வந்திருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி கூறப்பட்ட மஹ்தியின் ஜமாஅத்தில் இணைந்து அவர்களிடம் பைஅத் செய்திருப்பதாக நாம் வாதம் செய்கின்றோம். நிச்சயமாக நமது சிந்தனை மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். நம்மை அஹ்மதிகள் என்று கூறிக் கொள்கின்ற நாம் நமது தற்காலிக உலக விருப்பங்களையும் இன்பங்களையும் நமது குறிக்கோளாக ஆக்காமல் இருக்கும்போதுதான் உண்மையான அஹ்மதிகளாக இருக்க முடியும். மாறாக, இந்த இன்பங்களில் பீடிக்கப்பட்டிருக்கின்ற இந்த உலகில் ஒவ்வோர் அடியெடுத்து வைக்கும்போது அதில் ஷய்த்தான் தனது கூடாரத்தை அமைத்திருக்கின்றான். அவற்றின் மூலமாக இந்த உலகிலுள்ள ஒவ்வொரு நபரையும் தன் பக்கம் கவனம் செலுத்த வைப்பதற்கு அவன் முயற்சி செய்கின்றான். இதிலிருந்து முழுமையாக முயற்சி செய்து நாம் தவிர்ந்திருக்க வேண்டும். உலக செல்வங்களைப் பெறுவது மற்றும் உலக இன்பங்களிலிருந்து பலன் பெறுவது நமது குறிக்கோளாக ஒருபோதும் இருக்கக் கூடாது. ஏனென்றால், இவற்றின் முடிவு நல்லதாக இருப்பதில்லை.

அல்லாஹ் இந்த உலகப் பொருள்களுக்கு உதாரணம் கூறியவாறு இவை செழித்து வளர்கின்ற தாவரங்களைப் போன்றதாகும் என்று கூறுகின்றான். இறுதியில் அவை மக்கிப்போன சருகாக ஆகி விடுகின்றன. வேகமாக அடிக்கும் காற்று அவற்றை அடித்துச் சென்று விடுகின்றது. இவ்வாறே உலகவாதிகளின் முடிவு இருக்கின்றது. அவர்களிடம் பொருள்கள் அதிகமாக இருப்பது மற்றும் அவர்களது செல்வம் அவர்களுக்கு பயனளிப்பதில்லை. அவர்களது சந்ததிகளும் அவர்களுக்கு பயன்தரக் கூடியவர்களாக இருப்பதில்லை. சிலர் இந்த உலகிலேயே தங்களது செல்வம் மற்றும் சந்ததிகளை இழந்து விடுகின்றனர். ஒருவரது வெளிப்படையான முடிவு உலகத்தின் அடிப்படையில் சிறந்ததாக இருந்தாலும் கூட மறுமையில் அவர்களது கணக்கு வழக்குகள் இருக்கின்றன. அவர் உலக விளையாட்டுகளிலும் கேளிக்கைகளிலும் மூழ்கி இருந்ததன் காரணமாக இறைவன் மற்றும் மார்க்கத்தின் பக்தியும் காலியாக இருந்ததன் காரணமாக உலகின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்தியதன் காரணமாக இறைவன் அவர்களை தண்டனையில் ஆழ்த்தி விடுகின்றான். எனினும், சிலரது நன்மைகளின் காரணமாக அல்லாஹ் அவர்களை தனது மன்னிப்பின் போர்வையால் போர்த்தி மன்னித்து விடுகின்றான். அல்லாஹ்வின் கருணை மிகவும் பரந்ததாகும். அதன் கீழ் சிலர் வரும்போது இறை நியதிக்கேற்ப அவர்களது நன்மைகள் மூலமாக இறை திருப்தியைப் பெறக் கூடியவர்களாக அவர்கள் ஆகி விடுகின்றனர்.

ஆனால், அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இவ்வுலக வாழக்கைதான் எல்லாம் என்று கருதி விடாதீர்கள். அசல் வாழ்க்கை மரணித்த பிறகுள்ள வாழ்க்கையாகும். எனவே, இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கும், நல்ல முடிவு ஏற்படுவதற்கும் இறைவனுடன் தொடர்பு வைத்து அவனது கட்டளைகளுக்கேற்ப நடப்பது அவசியமானதாகும். மனிதன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்யும்போது, அவன் கூறியுள்ள வழிகளில் செல்லும்போது அதன் மூலம் அவரது முடிவு மட்டும் நல்லதாக இருப்பதில்லை. மாறாக, இந்த உலகமும் கூட அவருக்கு கிடைத்து விடுகின்றது. நீங்கள் அல்லாஹ்வால் உருவாக்கப்பட்டுள்ள உலக அருட்கொடைகளிலிருந்து பலன்பெற வேண்டாம் என்று அல்லாஹ் கூறவில்லை. ஆனால், இந்த உலகப் பொருள்களைப் பெறுவதற்காக உங்களது மார்க்கக் கடமைகள் மற்றும் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனமே செலுத்தாமல் இருக்கும் அளவுக்கு அதில் நீங்கள் மூழ்கிவிடக் கூடாது என கண்டிப்பாக அல்லாஹ் கூறியிருக்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''எந்த மக்கள் இறைவன் புறமிருந்து வருகின்றனரோ

அவர்கள் உலகை விட்டு விடுகின்றனர். இதன் கருத்து என்னவென்றால், அவர்கள் உலகை தங்களது நோக்கமாகவும் குறிக்கோளாகவும் கொள்வதில்லை. (உலகம் மட்டும் அவர்களது பார்வையில் இருப்பதில்லை.) அவ்வாறு இருக்கும் நிலையில் உலகம் அவர்களது தொண்டனாகவும் அடிமையாகவும் ஆகி விடுகின்றது''.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆனால், எவர்கள் இதற்கு எதிராக உலகை தனது நோக்கமாக ஆக்கிக் கொள்கின்றனரோ அவர்கள் உலகை எந்த அளவு பெற்றுக் கொண்டாலும் இறுதியில் அவர்கள் இழிவடைகின்றனர்''. (மல்.ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 317; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அவர்கள் கூறிய இவ்விஷயம் அக்காலத்தில் கூறப்பட்ட பழைய விஷயம் மட்டுமல்ல. மாறாக, உலகின் பொருளாதார அமைப்பு மிகவும் உறுதியாக இருக்கின்றது என்று கருதப்படுகின்ற பெரும் பெரும் வங்கிகள் இருக்கின்ற இந்தக் காலகட்டத்திலும் கூட அவர்கள் கூறும் விஷயம் பொருந்துகின்றது. அதாவது வங்கிகளின் ஆதரவுடன் தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் தங்களது தொழிலையும் வியாபாரத்தையும் கைவிட்டு விடுகின்றனர்.

இன்னும் சொல்வதென்றால், இதையும் நம்மால் பார்க்க முடிகின்றது. வங்கிகளும் கூட பெரும் இழப்பைச் சந்திக்கின்றது. இதன் காரணமாக வங்கிகள் தனது பணியாளர்களை வெளியேற்றி விட்டன அல்லது ஆட்களை குறைக்கின்றன. சில நகரங்களில் தனது கிளைகளை அது மூடி விட்டது. பெரும் பெரும் கம்பெனிகள் தமது பணியாளர்களை பணி நீக்கம் செய்துள்ளது. பல கம்பெனிகள் மீதும் அதன் பணியாளர்களும் அவர்களுக்கு கடன் வழங்கிய வங்கிகளும் வழக்கு தொடர்ந்து அவர்களை நீதிமன்றங்களுக்கு இழுத்து வருகின்றன. அங்கு அவர்களது தொழில் திவாலாகி விட்டது என்பதை நிரூபிக்க வேண்டியது வருகின்றது என்றெல்லாம் நாள்தோறும் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன. தங்களைத் தாங்களே அவர்கள் திவாலாகி விட்டதாக அறிவிக்க வேண்டியது வருகின்றது. பிறகு அவர்களது சொத்துக்கள் விற்கப்படுகின்றன. அதனால் ஒன்றிரண்டு பைசாக்களுக்குக் கூட தேவை உடையவர்களாக அவர்கள் ஆகிவிடுகின்றனர்.

2008 –ல் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. அதன் தாக்கங்கள் இன்று வரை இருந்து வருகிறது. பெரிய பெரிய தொழில்கள் திவாலாகி விட்டன. எதுவரையென்றால், அரசாங்கங்கள் கூட இதனால் பாதிப்பிற்கு ஆளாகின. பெட்ரோலை உருவாக்கக் கூடிய நாடுகள் நமது இந்த செல்வம் ஒருபோதும் முடிந்து விடாது என்று கருதின. ஆனால், அதற்கு மாற்றமாக நடந்து விட்டது. அவர்களோடு என்ன நடந்தது? அந்த நாடுகளில் கூட அங்குள்ள அரசாங்கங்களுக்கு தமது செலவீனங்களை குறைக்க வேண்டியது வந்தது. தமது பணியாளர்களை வெளியேற்ற வேண்டியது வந்தது. இது முஸ்லிம் நாடுகளின் பேரிழந்த நிலையாகும். அல்லாஹ் அவர்களுக்கு எந்த செல்வத்தை வழங்கினானோ அதனை அங்குள்ள அரசர்களும் ஆட்சியில் இருப்பவர்களும் அரசியல் தலைவர்களும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப நடந்தவாறு அதனை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்குரிய வழியாக ஆக்கிக் கொள்வதற்குப் பகரமாக அதனை உல்லாசமான விஷயங்களுக்காக செலவு செய்தனர்; செலவு செய்து வருகின்றனர். அந்த பெட்ரோல் செல்வம் மற்றும் ஏனைய செல்வங்கள் மூலமாக மனிதனை காப்பாற்றுவதற்கும், ஏழை முஸ்லிம் நாடுகளையும் ஏனைய நாடுகளையும் தங்களது கால்களில் நிற்க வைப்பதற்கும் முயற்சி செய்வதற்குப் பகரமாக, தங்களது நாடுகளில் பசியாகவும் ஆடையில்லாமலும் இருப்பவர்களின் துயரத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குப் பகரமாக அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தாமலேயே இருந்து விட்டனர். தங்களது வயிற்றை நிரப்புவதிலேயே அவர்கள் ஈடுபட்டு வந்தனர். இப்போதுவரை இந்த நிலைதான் இருந்து வருகின்றது. அதன் விளைவாக அவர்கள் உலகின் முன்னாலும் இழிவடைந்து விட்டனர்.

ஆனால், அதை அவர்கள் புரிந்து கொள்ள –வில்லை. மறுமையின் பக்கமும் அவர்கள் பார்வை செல்லவில்லை. அங்கு கிடைக்கவிருக்கின்ற தண்டனை குறித்து இறைவன் எச்சரித்துள்ளான். அது கடினமானதும் இழிவை ஏற்படுத்தக் கூடிய தண்டனையாகவும் இருக்கின்றது. எந்நிலையிலும் உலகின் செல்வமானது தனி நபர்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும் அல்லது பெரும் பெரும் வியாபாரிகளுடனும் வியாபாரக் கம்பெனி –களுடனும் தொடர்புடையதாக இருந்தாலும் அல்லது அவற்றிற்கு அரசாங்கத்துடன் தொடர்பு இருந்தாலும் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதனால் அல்லாஹ்வின் பிடியின்கீழ் அது அவர்களை கொண்டு வந்து விடுகின்றது என்ற விஷயத்தை நாம் மறுக்க முடியாது. அவர்களுக்கு இறைவன் விரும்பினால் இவ்வுலகம் மற்றும் மறுவுலகம் ஆகிய இரண்டு இடங்களிலும் தண்டனை வழங்கலாம் அல்லது அவன் விரும்பினால் மக்கள் இவ்வுலகில் தற்காலிகப் பலன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். மறுவுலகில் அவர்களுக்கு அல்லாஹ் தண்டனை வழங்குகின்றான்.

எனவே, இது மிகவும் அச்சத்திற்குரிய இடமாகும். ஒவ்வோர் அறிவுள்ள மனிதனும் உண்மையான முஸ்லிமும் குறிப்பாக அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்ட ஒருவர் எப்போதும் இதனை கண்முன் நிறுத்த வேண்டும். வெளிப்படையாக மட்டுமல்லாமல் இறை வணக்கங்களை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொள்வதற்கும் ஒரு வேதனையும் முயற்சியும் இருக்க வேண்டும். சிலர் நாங்கள் தொழுகின்றோம். இறை வணக்கங்களை நிறைவேற்றுகின்றோம். நோன்பும் நோற்கின்றோம். அவ்வாறிருக்க அல்லாஹ் படைத்துள்ள அருட்கொடை –களைப் பெறுவதற்கு நாங்கள் முயற்சி செய்தால் அதில் என்ன தீமை இருக்கின்றது? என்று கேட்கலாம். முதலாவதாக, இறை வணக்கங்களில் கலப்பற்ற தன்மையும் நன்றியுணர்வும் இருக்க வேண்டும். இதையே அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது, உங்களது இறை வணக்கங்களில் கலப்பற்ற தன்மையும் நன்றியுணர்வும் இருக்க வேண்டும். இரண்டாவதாக, இறைவனின் படைப்பினங்–களுக்குரிய உரிமையையும் செலுத்த வேண்டும். ஆனால், இங்கு என்ன நடக்கின்றது? நாட்டிலுள்ள அரசர்கள் சுற்றுலா செல்வதற்காக விமானங்களின் ஒரு படையே செல்கின்றது. பெரும் பெரும் பொருள்களை எல்லாம் தங்களுடன் அவர்கள் எடுத்துச் செல்கின்றனர். அதற்காக பல மில்லியன் டாலர்கள் செலவு செய்யப்படுகின்றது. ஆனால், அவர்களது நாட்டைச் சார்ந்த ஏழைகளில் சிலருக்கு ஒரு நேர உணவு கூட மிகவும் அரிதாகத்தான் கிடைக்கின்றது. இது அல்லாஹ்வின் கட்டளையை விட்டு மிகத் தொலைவில் சென்று விடுவதாகும். ஒருபுறம் அல்லாஹ்வின் பெயரைக் கூறி விட்டு மறுபுறம் அவனது கட்டளைகளை அவர்கள் மறுக்கின்றனர். பிறகு இது அல்லாஹ்வின் தண்டனைக்கு காரணமாக ஆகி விடுகின்றது. இவை வெளிப்படையான விளையாட்டும் கேளிக்கையுமாகும். வெளிப்படையான அலங்காரமும் பெருமை கொள்வதுமேயாகும். இது தமது செல்வத்தை ஆகாத வழிகளில் செலவிடுவதன் வெளிப்பாடாகும்.

அத்தகைய மக்களைப் பற்றிதான் ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: வெளிப்படையான தொழுகை மற்றும் நோன்புடன் கலப்பற்ற தன்மையும் உண்மையும் இல்லாமல் இருந்தால் அது எவ்வித சிறப்பையும் தனக்குள் வைத்திருப்பதில்லை. (மல்.ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 420; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அத்தகைய மக்களின் தொழுகைகள் பற்றியே அல்லாஹ் திருக்குர்ஆனில் فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ – 'அத்தகைய தொழுகையாளிகளுக்கு அழிவு உண்டாகட்டும்' (107:5) என்று கூறுகின்றான்.

உண்மையில் இறைவன் நமது ஆன்மீக நிலைமைகளில் சிறந்த நிலைமைகளை உருவாக்கக் கூடிய இறை வணக்கங்களையும் பணிகளையும்தான் உண்மையிலேயே விரும்புகின்றான். நம்மிடம் வேதனையை உருவாக்கும் வகையிலுள்ள உணர்வுடன் நாம் அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். அது அல்லாமல் நாம் எவர் மீதும் பேருபகாரம் செய்வதாக அது இருக்கக் கூடாது. பிறகு அத்தகைய இறை வணக்கங்கள் அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக் கூடியதாக ஆகி விடுகின்றது. அத்தகைய செல்வமும் கூட நம்மை அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக்கி விடுகின்றது. நான் ஏற்கனவே கூறியதுபோன்றே உலகின் பொருள் –களையும் செல்வங்களையும் உலகையும் சம்பாதித்துக் கொள்வதிலிருந்து இறைவன் நம்மை தடுக்கவில்லை. அல்லாஹ் படைத்துள்ள அருட்கொடைகள் நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஆகுமானவையாகும். நிபந்தனை என்னவென்றால், ஆகுமான வழிகளில் அவற்றைப் பெற்றிருக்க வேண்டும். அவை மார்க்கத்தின் வழியிலும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தும் வழியிலும் தடையாக இருக்கக் கூடாது. இறை வணக்கங்களில் தடையை ஏற்படுத்தக் கூடாது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தனது சமுதாயத்தைப் பற்றிய இந்த கவலை இருந்தது. அதாவது எந்த தூய புரட்சியை அன்னார் சஹாபாக்களிடம் உருவாக்கினார்களோ, மேலும் அந்த சஹாபாக்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குகின்ற அந்த உணர்வை எவ்வாறு புரிந்திருந்தார்களோ அது இனி வரவிருக்கின்ற முஸ்லிம்களிடமிருந்து தொலைந்து போய் விடக் கூடாது. அழிந்து போய் விடக்கூடாது என்ற கவலை அவர்களுக்கு இருந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் எனது சமுதாயத்தின் எந்த விஷயம் தொடர்பாக எல்லா –வற்றையும் விட அதிகமாக அபாயம் இருக்கின்றது என்று உணர்கின்றேன் என்றால், எதைப் பற்றி எனக்கு கவலை இருக்கின்றது என்றால் எனது சமுதாயம் தமது சுய விருப்பங்களைப் பின்பற்றிச் செல்லும் உலக எதிர்பார்ப்புகளை நிறைவேற்று–வதற்காக மிகப்பெரிய திட்டங்களை அது தீட்டத் தொடங்கி விடும். இந்த விருப்பங்களைப் பின்பற்றிச் செல்வதன் விளைவாக அது உண்மையை விட்டும் தொலைவில் சென்று விடும். உலகை சம்பாதிப்ப –தற்காக அவர்கள் தீட்டும் திட்டங்கள் மறுமையில் இருந்து கவனமற்றவர்களாக அவர்களை ஆக்கி விடும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''மக்களே! இந்த உலகம் பயணத்திற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டது. மறுமையும் வருவதற்கு ஆயத்தமாகி விட்டது. இரு பக்கங்களிலிருந்தும் பயணம் ஆரம்பமாகி விட்டது. உலகம் அதன் முடிவின் பக்கம் செல்கின்றது. இறுதியில் கியாமத் வரவிருக்கின்றது. மறுமையில் நமது கணக்கு வழக்குகளை ஒப்படைக்க வேண்டியதிருக்கின்றது. அதற்கான ஆயத்தம் ஆரம்பமாகி விட்டது''.

பிறகு கூறினார்கள்: ''இந்த இரண்டில் ஒவ்வொன்றிற்கென்றும் சில அடிமைகளும் அடியார்களும் இருக்கின்றனர். உலகிற்கும் சிலர் அடிமையாக இருக்கின்றனர். சிலர் மறுமையைப் பற்றி கவலைப்படுபவர்களாகவும் இருக்கின்றனர்''.

தொடர்ந்து கூறினார்கள்: ''எனவே, உங்களிடம் உலகின் அடிமைகளாக நீங்கள் இல்லாமல் இருப்பதற்கான ஆற்றல் இருந்தால் கண்டிப்பாக அவ்வாறே நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இப்போது செயலின் வீட்டில் உள்ளீர்கள். இப்போது கணக்கு பார்ப்பதற்கான நேரம் வரவில்லை. ஆனால், நீங்கள் நாளை மறுமையின் வீட்டில் இருப்பீர்கள். அங்கு எந்த செயலும் இருக்காது''. (பிஹாருல் அன்வார் அஷ்ஷேக் முஹம்மது பாகிர் மஜ்லிஸி கிதாபுல் ஈமான் வல்ஃபிக்ர் அல்ஜுஸ்உத்தாசிஹ் வ ஸித்தூன் ஹதீஸ் 63. பக்கம் 263-264 பைரூத்திலுள்ள அமீரத் அச்சகத்தில் 2008 -ல் வெளியிடப்பட்டது) எந்த செயல்களை நீங்கள் செய்ய வேண்டியதுள்ளனவோ எவற்றின் விளைவுகள் கிடைக்க வேண்டியதிருக்கின்றனவோ அவை இந்த உலகில்தான் கிடைக்கும். எனவே, உங்களது செயல்களை நீங்கள் சரிசெய்யுங்கள்.

எனவே, இந்த உலகம் செயலின் வீடாகும். இந்த உலகின் செயல்கள் மறுமையில் தண்டனை அல்லது நற்கூலிக்கான வழியாக ஆகி விடும். எனவே, இந்த உலகம் ஒரு விளையாட்டு மற்றும் கேளிக்கையும் அலங்காரத்தைப் பெறுவதற்கான வழியும், செல்வங்கள் மற்றும் சந்ததிகள் மூலம் உங்களுக் –கிடையில் பெருமையடிப்பது மட்டுமேயாகும் என்று அல்லாஹ் கூறியுள்ள இந்த விஷயத்தை நம்மில் நினைவில் வைத்திருப்பவர்கள் எத்தகைய நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனர்? இவ்வுலகின் தகுதி என்ன? இவ்வுலகிற்கு காய்ந்துபோன புல்லை விட அதிகமாக வேறு எந்த தகுதியும் இல்லை. அது காய்ந்துபோய் சருகாகி விடுகின்றது. காற்று அவற்றை அடித்துச் செல்கின்றது. அசல் விஷயம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகும். இதே விஷயத்தை தான் பெருமானார் (ஸல்) அவர்களும் நல்ல செயலைச் செய்யுங்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்றுக் கொள்பவர்களாக ஆகி விடுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் எல்லா நேரமும் இந்த விஷயத்தைத்தான் தேடிக் கொண்டிருந்தனர். எவ்வாறு நாம் எந்த வழிமுறையைக் கற்று அதனை புரிந்து செயல்படுவதன் மூலம் இறைவனது திருப்தியைப் பெறுபவர்களாகவும் நல்ல செயலைச் செய்பவர்களாகவும் அது நம்மை ஆக்கும் என்பதையே அவர்கள் தேடிக் கொண்டிருந்தனர். அந்த சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இதைப் பற்றி கேட்கவும் செய்தனர். இந்த நோக்கத்திற்காகவே ஒரு நபர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு அத்தகைய ஒரு செயலைப் பற்றி கூறுங்கள். நான் அதை செய்கின்றபோது அல்லாஹ் என் மீது அன்பு செலுத்த வேண்டும். ஏனைய மக்களும் என்னை விரும்ப வேண்டும். அல்லாஹ்வும் என் மீது அன்பு கொள்ள வேண்டும். அவனது அடியார்களும் என்னை விரும்ப வேண்டும் என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உலகை விரும்பாதவ –னாகவும் உலகை விட்டும் தன்னிறைவு பெற்றவனாகவும் நீர் ஆகிவிடு. அல்லாஹ் உம் மீது அன்பு கொள்ள ஆரம்பித்து விடுவான்.

எவையெல்லாம் மக்களிடம் இருக்கின்றனவோ அதாவது உலக செல்வங்கள் மற்றும் பொருள்கள் பற்றிய ஆசையை விட்டு விடுங்கள். பேராசை நிறைந்த பார்வையுடன் மக்களின் பக்கம் பார்க்காதீர்கள். அவர்களது செல்வங்களை பேராசை நிறைந்த பார்வையுடன் பார்க்காதீர்கள். அதனால் மக்கள் உங்களை நேசிக்கத் தொடங்கி விடுவர். (சுனன் இப்னி மாஜா கிதாபுஸ்ஸுஹது பாபுஸ்ஸுஹது ஃபித்துன்யா ஹதீஸ் 4102) உலகை விரும்பாமல் இருப்பது என்பது மனிதன் சமுதாயத்துடன் உள்ள தொடர்பை முற்றிலும் துண்டித்துக் கொள்வது அல்லது உலகை விட்டும் முற்றிலுமாக தன்னை துண்டித்துக் கொள்வது என்பதல்ல. திருமணம் செய்யாமல் இருங்கள். சந்ததிகளுக்குரிய உரிமைகளைச் செலுத்தாமல் இருங்கள். எந்தத் தொழிலைச் செய்து வருகின்றீர்களோ அதனையும் விட்டு விடுங்கள். கை மேல் கை வைத்து அமர்ந்து விடுங்கள். உலகப் பணிகளுக்காக உழைக்காமல் இருங்கள். துறவியாக ஆகி விடுங்கள் என்பது ஒருபோதும் இதற்கு பொருளல்ல. இஸ்லாம் இதை விரும்பவில்லை. நமக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. அவர்கள் திருமணம் செய்தார்கள். அவர்கள் மனைவியருக்குரிய உரிமைகளைச் செலுத்தினார்கள். அவர்களுக்கு சந்ததிகளும் பிறந்தனர். அவர்கள் சந்ததிகளுக்குரிய உரிமைகளையும் செலுத்தினார்கள். அவர்களிடம் பொருளும் செல்வமும் வந்தன. ஆட்டு மந்தைகள் அவர்களிடம் இருந்தன. அறிவிப்புகளில் வருகின்றது. எவ்வித கவலையும் இல்லாமல் அவற்றை அவர்கள் ஒரு காஃபிருக்கு வழங்கி விட்டார்கள். இவை உமக்கு இந்த அளவு விருப்பமானதாக இருக்கின்றது என்றால், இதனை இந்த அளவு பேராசையுடன் நீர் பார்க்கின்றீர் என்றால் இவற்றை எடுத்துச் செல்வீராக என்றவாறு அவற்றை வழங்கினார்கள். அதன் விளைவாக அந்த நபர் முஸ்லிமாகி விட்டார். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில் பாபு ஃபீ ஸஹாவதி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஹதீஸ் 6020) ஆனால் அவர்கள் இந்த எல்லா பொருள்களும் அவர்களிடம் இருந்தும் கூட அல்லாஹ் மற்றும் அவனது அடியார் –களுக்குரிய உரிமைகளைச் செலுத்தினார்கள். இந்தப் பொருள்களை மட்டும் அவர்கள் தங்கள் கண்ணுக்கு முன்னால் வைத்திருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் எனது நடைமுறைக்கு ஏற்ப நீங்கள் செயல்படுவதும் அவசியமானதாகும். நீங்கள் துறவியாக ஆகிவிடக் கூடாது. உலகிலும் நீங்கள் வாழ வேண்டும். இந்தப் பொருள்களை உங்கள் முன்னால் வைத்திருக்கவும் வேண்டும். ஏனென்றால், நான் இதைத்தான் செய்து வந்துள்ளேன் என்று கூறினார்கள். (சுனன் நஸயீ கிதாபுன்னிகாஹ் பாபுன்னஹா அனித்தபத்துல் ஹதீஸ் 3219) எனவே, உலகம் நமது இறைவணக்கங்களுக்கு இடையில் வந்து விடக் கூடாது. அவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதில் இருந்து நம்மை தடுத்து விடக் கூடாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பொருளையும் செல்வத்தையும் சம்பாதிப்பதில் நாம் ஈடுபட்டிருப்பது அல்லாஹ்வை விட்டும் கவனமற்று இருப்பவர்களாக நம்மை ஆக்கி விடக் கூடாது. இவ்வாறே மற்றவர்களது செல்வம் மற்றும் சொத்துக்களின் மீது பேராசையின் பார்வை இருக்கக் கூடாது.

ஏனென்றால், பேராசையுடன் கூடிய பார்வை தான் மற்றவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடிய சிந்தனையை உருவாக்குகிறது. உலகில் நிலவும் குழப்பமும் இந்த பேராசையின் காரணமாகத்தான் ஏற்பட்டுள்ளது. பெரும் பெரும் வல்லரசுகள் சிறிய நாடுகள் மீது இவர்கள் நமது ஆதரவின் கீழ் இருந்தால்தான் இவர்களது செல்வத்திலிருந்தும் இயற்கை வளங்களிலிருந்தும் நாம் பயன் பெற முடியும் என்ற காரணத்திற்காக மட்டுமே அவற்றின் மீது தமது பார்வையை வைத்திருக்கின்றன. எனவே, தனி நபர்களுக்கு இடையில் நிலவும் குழப்பமாக இருந்தாலும் சரி அல்லது பெரும் அரசாங்களுக்கு இடையில் நிலவும் குழப்பமாக இருந்தாலும் சரி உலகில் இதன் காரணமாகத்தான் குழப்பம் உருவாகின்றது. மற்றவர்களின் செல்வங்கள் மீது பார்வை இருக்கும்போது இத்தகைய நிலை உருவாகின்றது.

எனவேதான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களிடம் போதுமென்ற மனம் உருவாக வேண்டும். பேராசையுடன் மற்றவர்களைப் பார்க்காதீர்கள். எனினும் உங்களது தகுதிகளையும் திறமைகளையும் பயன்படுத்துங்கள். உழையுங்கள்; மனிதன் உழைக்கும்போது அதன் மூலமாக செல்வத்தைச் சம்பாதிப்பதில் எந்தக் குற்றமும் இல்லை. நிபந்தனை என்னவென்றால், இந்த பொருள் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதற்கு தடையாக இருக்கக் கூடாது.

உலகை விரும்பாமல் இருப்பது என்றால் என்ன? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உலகை விரும்பாமல் இருப்பது அல்லது உலகைத் துண்டித்துக் கொள்வது என்பதன் பொருள், மனிதன் தன் மீது ஹலாலான ஒன்றை ஹராமாக்கிக் கொள்வது என்பது அல்ல. உலகை விரும்பாமல் இருப்பது என்பதற்கு எந்த விஷயங்களை அல்லாஹ் ஆகுமானதாக ஆக்கியுள்ளானோ அவற்றை தனக்கு விலக்கப்பட்டவையாக ஆக்கிக் கொள்வது என்று பொருள் அல்ல. அவ்வாறே அல்லாஹ் வழங்கியுள்ள பொருளை அழித்து விடுதல் என்றும் இதற்கு பொருள் அல்ல. மாறாக உலகைத் துறப்பது என்பது உங்களுக்கு உங்களது செல்வத்தை விட அதிகமாக இறைவனது அருள் மற்றும் அவன் வழங்கும் கொடையின் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். உங்களது செல்வத்தின் மீது நம்பிக்கை வைக்காதீர்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். அவனிடம் பொறுப்பை ஒப்படைத்து விடுங்கள். உங்களுக்கு கிடைக்கவிருக்கின்ற நற்பலன் மற்றும் நற்கூலியின் பக்கம் உங்களது பார்வை இருக்க வேண்டும். நீங்கள் துன்பங்களை நற்பலனைப் பெறுவதற்கான வழியாகக் கருதுங்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுஸ்ஸுஹது பாபுஸ்ஸுஹது ஃபித்துன்யா ஹதீஸ் 4100) துன்பங்கள் துயரங்கள் வரும்போது அதன் காரணமாக செல்வங்களை நீங்கள் இழந்து விட்டால் அதற்காக நீங்கள் அழுது புலம்ப ஆரம்பித்து விடாதீர்கள். மாறாக, இதன் காரணமாக எனக்கு நற்கூலி கிடைக்கும் என்று நீங்கள் நினைக்க வேண்டும். எனவே, அசல் விஷயம் என்னவென்றால் உலகச் செல்வங்களில் இழப்புகள் ஏற்படுவதன் காரணமாக இணை வைத்தலின் வாடை வரும் அளவிற்கு மனிதன் அதற்காக தனது துயரத்தையும் பதற்றத்தையும் வெளிப்படுத்தக் கூடாது. தொழில் புரிகின்ற பல மக்களும் இருக்கின்றனர். அவர்களுக்கு பொருளாதார இழப்புகள் ஏற்படும் போது அவர்கள் தங்களது சுய நினைவை இழந்து விடுகின்றனர். சிலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். இறைவன் மீது நம்பிக்கையும் போதுமென்ற மனமும் இருந்தால் பிறகு ஒருபோதும் இந்த நிலைமை உருவாகாது. எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களிடம், தனது உம்மத்தைச் சார்ந்தவர்களிடம் உலகைத் துறப்பது அல்லது உலகை விரும்பாமல் இருப்பது ஆகியவற்றில் இந்தத் தரத்தையே விரும்புகின்றார்கள்.

இது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் இந்தக் காலத்தில் பல அஹ்மதிகளுக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக எத்தகைய அறிவை அவர்களுக்கு வழங்கியுள்ளான் என்றால், உலக இழப்புகளுக்கு அவர்களின் முன்னால் எந்தத் தகுதியும் இருப்பதில்லை. அத்தகைய நிலைமைகளில் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் பக்கம் நாம் திரும்ப வேண்டும் என்பதை அவர்கள் புரிந்திருக் –கின்றனர். நாம் பார்க்கின்றோம். பாகிஸ்தானிலும் மற்ற இடங்களிலும் அஹ்மதிகள் இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மதிப்புள்ள தொழில்களை எதிரிகள் அழித்தனர். அவற்றை எரித்தனர். ஒரு சமயத்தில் பாகிஸ்தானின் பிரதமர் அவர்கள், நான் அஹ்மதிகளை தமது கைகளில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தும்படி செய்வேன் என்றும் கூட கூறினார். நான் இப்போது இவர்களது கைகளில் பிச்சைப் பாத்திரத்தைக் கொடுத்து விட்டேன். இவர்கள் இனி யாசகம் கேட்டுத் திரிவார்கள் என்று கூறினார். ஆனால் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்திருந்த அந்த அஹ்மதிகள் அரசாங்கத்திடமும் எதையும்

கேட்கவில்லை. பிச்சைப் பாத்திரத்தை ஏந்தியவாறு வேறு எவரிடமும் எதையும் கேட்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாக இலட்சக்கணக்கான மதிப்புள்ள அந்த தொழில்கள் அழிந்து போயிருந்தும் அவை பல கோடிகள் மதிப்புள்ள தொழில்களாக மாறி விட்டன. இந்த உதாரணங்கள் எங்கு அஹ்மதிகளின் ஈமானிற்கு வலுவூட்டுவதற்குக் காரணமாக இருக்கின்றனவோ அங்கு அவை தமது நிலைமைகளின் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள, முன்னேற்றமடைந்த நாடுகளுக்குச் சென்றுள்ள அஹ்மதிகளுக்கு இந்த உணர்வை உருவாக்கக் கூடியதாகவும் அவை இருக்க வேண்டும். பாகிஸ்தானுக்கு வெளியே சென்று பொருளாதார ரீதியாக அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய சிறப்பான நிலைமை முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளாக இருக்கின்றது. இது அல்லாஹ்வின் அருளாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததன் காரணமாக கிடைத்த அருளாகவும் இருக்கும்போது நமது சிறந்த நிலைமையானது எந்த வகையிலும் நாம் பெருமையடித்துக் கொள்வதற்குரிய வழியாக ஆகி விடக் கூடாது. நாம் செல்வத்தின் மீதும் பொருளின் மீதும் உலக வாதிகளைப் போன்று விழக் கூடாது. நாம் பேராசையுள்ள பார்வையுடன் மற்றவர்களது செல்வங்களைப் பார்க்கக் கூடாது. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதற்கு ஏற்ப ஏதாவது ஒன்றை பெருமிதமிக்க பார்வையுடன் பார்ப்பதாக இருந்தால் பிறகு மார்க்கத்தின் அடிப்படையில் நம்மை விட சிறந்த நிலைமையில் உள்ளவரை பார்க்க வேண்டும். (சுனன் திர்மிதி அப்வாபு ஸிபதுல் கியாமத்தி வர்ரகாயிகீ வல்வர.'. ஹதீஸ் 2512) அவரைப் பார்த்து ஒன்று அவரைபோல் ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும் அல்லது அவரை விட சிறந்தவராக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூட திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளைகளைப் புரிந்தவாறும் இந்தக் கருத்தை நமக்கு புரிய வைத்துள்ளார்கள். இவற்றைப் பற்றிய அறிவு அதிகமாக அவர்களுக்குதான் இருந்தது.

அதாவது உலக ஈடுபாடுகளில் மற்றும் உலகச் செல்வங்களைப் பயன்படுத்துவதில் எந்த அளவு நாம் அவற்றைப் பின்பற்றிச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இறைவன் உலகப் பணிகளை, செல்வத்தை ஆகுமானதாக ஆக்கியுள்ளான். ஏனென்றால் இந்த வழியின் மூலமாகவும் சோதனை வருகின்றது. அதாவது எந்த உலகப் பணியையும் ஒருவர் செய்யாமல் இருந்து பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருந்தால் அப்போதும் அவருக்கு சோதனை வருகின்றது. மனிதன் துன்பங்களில் சிக்கிக் கொள்கின்றான். இந்த சோதனையின் காரணமாக மனிதன் திருடனாகவும் ஆகி விடுகின்றான். கொள்ளைக் –காரனாக ஆகி விடுகின்றான். இதனால் என்னென்ன தீய பழக்கங்களை அவன் மேற்கொள்கின்றான்? ஆக, பொருளாதார பலவீனமும் மனிதனை தீமைகளில் ஆழ்த்தி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால், ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு வரம்பு இருக்கின்றது. உலகப் பணிகளில் எந்த அளவு ஈடுபட வேண்டும் என்றால் அது மார்க்கத்தின் வழியில் உங்களுக்கு உதவக்கூடிய வழிவகைகளை உருவாக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதில் உங்களது குறிக்கோள் மார்க்கமாகவே இருக்க வேண்டும். மார்க்கத்தைப் பெறுவது நோக்கமாக இருக்க வேண்டும். அதாவது மார்க்கத்திற்கு இரண்டாவது தகுதியை வழங்கக் கூடாது. உலகை சம்பாதியுங்கள். உலகிலிருந்து பலனைப் பெறுங்கள். ஆனால், எல்லா சமயத்திலும் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும் தக்வாவும் உங்கள் கண் முன்னால் இருக்க வேண்டும். மார்க்கத்தின் போதனை உங்கள் முன்னால் இருக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் உலகப் பணிகளில் ஈடுபடுவதிலிருந்தும் உங்களைத் தடுக்கவில்லை. இரவு பகலாக உலகத் தொழில்களிலும் உலக சிக்கல்களிலும் மூழ்கி இருந்தவாறு இறைவனுக்காக பூர்த்தி செய்ய வேண்டிய பத்தியையும் உலகின் மூலமாகவே நிரப்பி விடுங்கள் என்றும் நாம் கூறவில்லை. அதாவது, இறை வணக்கத்தின்போதும் கூட இறைவன் நினைவுக்கு வராத அளவுக்கு உலக விஷயங்களில் நாம் மூழ்கி இருக்கக் கூடாது. தொழுகைக்கான சமயங்களில் இன்டர்நெட்டிலும் திரைப்படங்களைப் பார்ப்பதிலும் ஒவ்வோர் உலக நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும் நாம் ஈடுபட்டிருந்தால் அது சரியல்ல. அவ்வாறு செய்யக் கூடாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவராவது அவ்வாறு செய்தால் சுயமே அவர் இழப்பிற்கான காரணிகளை ஏற்படுத்திக் கொள்கின்றார். அவரது நாவில் வாதம் செய்வது மட்டும்தான் இருக்கின்றது. வெறும் வாதம் மட்டுமே இருக்கின்றது. உண்மையான முறையில் அவர் பைஅத் செய்யவில்லை. ஈமானும் அவரிடம் இல்லை. சுருக்கமாக, நீங்கள் உயிருள்ளவர்களின் நட்பில் இருந்து வாருங்கள். அதன் மூலமாக உயிருள்ள இறைவனின் தோற்றத்தை உங்களால் பார்க்க முடியும். (மல்.'.பூஸாத் தொகுதி 2 பக்கம் 73; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மனிதன் எந்தவொரு உலக நோக்கமும் இல்லாமலும் உலகத்துடன் தொடர்பு வைக்காமலும் இருக்க வேண்டும் என்று எவரும் கருத வேண்டாம்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது எனது கருத்தல்ல. உலகைப் பெறுவதை அல்லாஹ் தடை செய்யவில்லை. மாறாக, இஸ்லாம் துறவறத்தைத் தடை செய்திருக்கின்றது. இது கோழைகளின் பணியாகும். உலகை விட்டு விலகி இருப்பதும் கூட கோழைகளின் பணியாகும். நம்பிக்கை கொண்டவரின் தொடர்பு எந்த அளவு உலகத் தொடர்புகளுடன் விரிவாக இருக்குமோ அந்த அளவு அது அவரது உயர்வான தகுதிகளுக்குக் காரணமாக இருக்கும். அதாவது உலகத் தொடர்புகளும் இருக்க வேண்டும். ஆனால் உலகம் நோக்கமாக இருக்கக் கூடாது. ஏனென்றால் அவரது குறிக்கோள் மார்க்கமாக இருக்கின்றது. உலகமும் அதன் செல்வமும் இருப்பிடமும் மார்க்கத்தின் தொண்டனாக இருக்கின்றது.

எனவே, அசல் விஷயம் என்னவென்றால், உலகம் நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக உலகைப் பெற்றுக் கொள்வதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்கு தொண்டனாக இருக்கும் வகையில் உலகைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக, மனிதன் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு செல்வதற்காக பயணத்தில் சவாரியையும் பயணத்திற்கான உணவையும் தன்னுடன் எடுத்துச் செல்கின்றான். ஆனால், அவனது அசல் குறிக்கோள் அவன் அடைய வேண்டிய இலக்கை சென்றடைவதாகும். சவாரி மற்றும் வழியில் அவனுக்கு தேவைப்படுபவை அவனது குறிக்கோளாக இருப்பதில்லை. இவ்வாறே மனிதன் உலகைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அதனை மார்க்கத்தின் ஊழியனாகக் கருதியவாறு பெற்றுக் கொள்ள வேண்டும்.

பிறகு இதே கருத்தை விளக்கியவாறு திருக்குர்ஆனில் இறைவன் கற்றுத் தந்துள்ள رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً என்ற துஆவைப் பற்றி விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً என்ற இந்த போதனையிலும் கூட இறைவன் முதலில் உலகைப் பற்றி கூறியுள்ளான். ஆனால் எந்த உலகைப் பற்றி கூறியுள்ளான்? ஹஸனதுத் துன்யா அதாவது உலகின் நன்மைகள் பற்றி கூறியுள்ளான். அதாவது உலகியல் நன்மைகள் மறுமையின் நன்மைகளுக்குக் காரணமாக இருக்க வேண்டும். இந்த துஆ பற்றிய போதனையிலிருந்து நம்பிக்கை கொண்டவர் உலகைப் பெற்றுக் கொள்வதில் மறுமையின் நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகப் புரிகின்றது. அத்துடன் ஹஸனத்துத் துன்யா என்ற சொல்லில் நம்பிக்கை கொண்ட ஒரு முஸ்லிம் உலகைப் பெற்றுக் கொள்வதற்காக கடைபிடிக்க வேண்டிய அந்த எல்லா சிறந்த வழிமுறைகளைப் பற்றிய குறிப்பும் வந்து விட்டது. உலகை எல்லா வழிமுறைகளின் மூலமாகவும் பெற்றுக் கொள்ளுங்கள். அவற்றை கடைபிடிப்பதன் மூலமாக நன்மையும் சிறப்பும் அதில் இருக்க வேண்டும். ஏனைய மனிதர்களுக்கு துன்பத்தைத் தருவதற்குக் காரணமாக இருக்கின்ற அந்த வழிமுறையை நாம் கடைபிடிக்கக் கூடாது. நாம் மனித இனத்தில் குறையுள்ள ஒருவராகவும் மனித இனம் வெட்கப்படுவதற்குக் காரணமானவர்களாகவும் ஆகிவிடக் கூடாது. சந்தேகமின்றி அத்தகைய உலகமானது மறுமையின் நன்மைகளுக்குக் காரணமாக ஆகி விடுகின்றது. மல்.'.பூஸாத் தொகுதி 2 பக்கம் 91-92; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு தண்டனை மற்றும் நரகத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: நரகம் என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று, மரணித்த பிறகு கிடைக்கும் என்று அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ள நரகமாகும். இரண்டாவதாக இந்த உலக வாழ்க்கையும் கூட இறைவனுக்காக இல்லாமல் இருந்தால் அதுவும் கூட நரகமேயாகும். அல்லாஹ் அப்படிப்பட்ட மனிதனை துன்பத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் அவனுக்கு சுகத்தை வழங்குவதற்கும் பொறுப்பாளியாக இருப்பதில்லை. வெளிப்படையான செல்வமும், பொருளும், அரசாங்கமும், கண்ணியமும், அதிகமாக சந்ததிகள் இருப்பதும் ஆகியவை ஒரு நபரது நிம்மதிக்கும், சுகத்திற்கும் காரணமாக இருக்கும் என்று ஒருபோதும் கருதாதீர்கள். அவற்றால் சுவர்க்கத்தை நாம் பெறவும் முடியாது. அவற்றால் ஒருபோதும் சுவர்க்கத்தை நாம் பெற முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சுவர்க்கத்தின் அருட்கொடைகளாக இருக்கின்ற அந்த நிம்மதியும், ஆறுதலும், அமைதியும் இவற்றால் ஒருபோதும் கிடைக்க முடியாது. அது இறைவனுக்காக உயிருடன் இருப்பதன் மூலமாகவும் அவனுக்காக மரணிப்பதன் மூலமாகவே கிடைக்க முடியும். எல்லா நேரங்களிலும் அல்லாஹ் நம் முன்னால் இருக்கும் போதுதான் அது கிடைக்க முடியும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டு உலக நன்மை –களையும் மனிதன் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மறுமையின் நன்மைகளும் அவனுக்கு கிடைக்க முடியும். இறைவன் அவனுக்கு முன்னால் இருந்து எல்லா நேரமும் இறைவன் என்னைப் பார்க்கின்றான் என்ற எண்ணம் உருவாகாத வரை மனிதன் செயல்படவும் முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிமார்கள் குறிப்பாக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் யஃகூப் (அலை) ஆகியோர் இந்த

வஸிய்யத்தைத்தான் செய்திருந்தனர். அதாவது, لَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُسْلِمُوْنَ நீங்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்கும் நிலையில் அல்லாமல் ஒருபோதும் மரணிக்க வேண்டாம். (2:133) வாழ்வதும், மரணிப்பதும் மனிதனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதல்ல. மனிதனுக்கு அதுபற்றி எதுவும் தெரியாது. இதன் கருத்து என்னவென்றால், எல்லா நேரத்திலும் இறைவன் மீது பார்வை இருக்க வேண்டும். மறுமை பற்றிய கவலை இருக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலக இன்பங்கள் அசுத்தமான பேராசையை உருவாக்கி அதனை வேண்டுவதையும் அதற்கான தாகத்தையும் அதிகரிக்கச் செய்து விடுகின்றது. உலக இன்பங்கள் என்றால் என்ன? அவை உலகை வேண்டுவதையும் அதன் தாகத்தையும் அதிமாக்கி விடுகின்றது. தாகம் தணியாமல் இருக்கின்ற நோயாளி போன்று அவரது நிலை இருக்கின்றது. இவ்வாறே உலகை வேண்டுபவரது நிலைமையும் இருக்கின்றது. தண்ணீர் குடித்து குடித்து அதற்குப் பிறகும் தாகம் தணியாமல் இருக்கின்ற நோயாளி இறுதியில் தண்ணீர் தீர்ந்து விட்டதைக் காண்கின்றார். ஆனால் அவரது தாகம் தணிவதில்லை. அவ்வாறே உலக ஆசையும் ஒருபோதும் தணிவதில்லை. எதுவரையென்றால், அவர்கள் அழிந்து விடுகின்றனர். எனவே, பொருத்தமற்ற இந்த ஆசைகளும் மற்றும் வேதனைகளின் நெருப்பும்கூட இந்த நரகத்திலுள்ள நெருப்புகளிலிருந்து உள்ளவையாகும். உலக ஆசைகளும், வேதனைகளும் கூட நெருப்பாக இருக்கின்றது. இதுவே நரகமாகும். மனிதனின் உள்ளம் சுகத்தையும் நிம்மதியையும் பெறுவதற்கு இவை விடுவதேயில்லை. இவை நிம்மதியிழந்த நிலைமையிலும் தத்தளிக்கும் நிலையிலும் அவனை ஆழ்த்தி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே, எனது நண்பர்களது பார்வை இவ்விஷயத்தில் இருந்து ஒருபோதும் மறைவாக இருந்து விடக் கூடாது. அதாவது மனிதன் செல்வம், பொருள், மனைவி மக்கள் ஆகியவற்றினால் ஏற்படும் சோதனையின் விளைவாக இவற்றிற்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு திரை உருவாகும் வகையில் அவற்றின் மீது பைத்தியமாக அவன் இருந்து விடக்கூடாது. இவற்றின் காரணமாக இறைவனை விட்டு விலகி அவன் தொலைவில் சென்று விடக் கூடாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதனால்தான் பொருளும் சந்ததிகளும் சோதனை –யாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அவற்றின் மூலமாகவும் மனிதனுக்கு ஒரு நரகம் தயாராகின்றது. அவற்றை விட்டும் அவன் பிரிக்கப்படும்போது மிகவும் நிம்மதியற்ற நிலையையும் பதற்றத்தையும் அவன் வெளிப்படுத்துகின்றான்.

இவ்வாறு نَارُ اللّٰهِ الْمُوْقَدَةُ الَّتِیْ تَطَّلِعُ عَلَی الْاَفْـِٕدَةِ – அது அல்லாஹ்வால் எரியச் செய்யப்பட்ட நெருப்பாகும். அது உள்ளங்களில் பாய்ந்து செல்லும் (104:7–8) என்ற விஷயம் வெறும் எழுத்துக்களில் மட்டும் இருப்பதில்லை. மாறாக அது அறிவுப்பூர்வமான வடிவத்தைப் பெற்று விடுகின்றது. இந்த நெருப்பு மனிதனின் உள்ளங்களை எரித்து பொறித்த மாமிசத்தைப் போன்று அதை ஆக்கி விடுகின்றது. எரிந்த கரிக்கட்டையைப்போன்று அதனை கருப்பாகவும் இருள் படிந்ததாகவும் ஆக்கி விடுகின்றது. இது அல்லாஹ் அல்லாதவற்றின் மீதுள்ள அன்பாகும். (மல்.:பூஸாத் தொகுதி 2 பக்கம் 101-102; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் தவிர்த்து மற்றவற்றின் மீது வைக்கும் அன்பு இவ்வுலக நரகமாக ஆகி விடுகின்றது. எனவே, நம்மை இந்த நாடுகளிலுள்ள இன்பங்கள் மற்றும் சுகங்கள் இறைவனை வணங்குவதிலிருந்தும் நம்மை கவனமற்றவர்களாக ஆக்காமல் இருக்கட்டுமாக. அவனுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதிலிருந்து அவை நம்மை விலக்காமல் இருக்கட்டும். நமது நல்ல நிலைமைகள், பொருளாதாரத்தில் சிறந்த நிலைமைகள் பொருளாதார ரீதியாக பலவீனமான நிலைமையில் இருக்கின்ற சகோதரர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதிலிருந்தும் ஒருபோதும் நம்மை விலக்கி வைக்காமல் இருக்கட்டும். இவ்வாறே இஸ்லாத்தை பரப்புவதிலும் இஸ்லாத்தை தப்லீக் செய்வதிலும் நமது பங்கை செலுத்துபவர்களாக நாம் இருப்போமாக. அது அல்லாமல் நாம் இந்த நோக்கத்தை மறந்து விடக்கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் நாம் பைஅத் செய்திருப்பதன் நோக்கமும் இதுவேயாகும். அதாவது அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும். தப்லீகிற்குரிய உரிமையையும் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தையும் நாம் நிறைவேற்ற வேண்டும். இதன் மூலமாகவே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தை நாம் நிறைவேற்ற முடியும். நாம் எப்போதும் அல்லாஹ்வின் விருப்பத்தைத் தேடுபவர்களாக இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. நம்மை ஏமாற்றுகின்ற இந்த உலக வாழ்க்கை ஒருபோதும் நம்மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கட்டும். நாம் இந்த உலகின் நரகத்திலிருந்தும் தப்பித்துக் கொள்பவர்களாக இருப்போமாக. மறுமையின் நரகத்திலிருந்தும் தப்பித்துக் கொள்பவர்களாக இருப்போமாக. அல்லாஹ்வின் அருளும் அவனது திருப்தியும் நமக்காக இந்த உலகையும் சுவர்க்கமாக ஆக்கட்டும். மறுமையிலும் சுவர்க்கத்தைப் பெறக் கூடியவர்களாக நாம் இருப்போமாக.

இப்போது தொழுகைக்குப் பிறகு இருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். முதல் ஜனாஸா ரஹீம்யார்கான் மாவட்டத்திலுள்ள கான்பூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர்கள் மே மாதம் 3 ஆம் தேதி ஷஹீதாக்கப்பட்டிருக்கின்றார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இதுபற்றிய விபரமாவது, மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மது சாஹிப் ஷஹீது அவர்களின் வீடு கான்பூரில் கிரீன் டவுணில் இருக்கின்றது. வீட்டிலிருந்து நான்கு அல்லது ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இவர்கள் பெட்ரோல் பம்ப் நடத்தி வந்தார்கள். மே மாதம் 3 ஆம் தேதி இரவில் வழக்கம்போல் இவர்கள் தமது பெட்ரோல் பம்பிலிருந்து வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு கிலோ மீட்டர் தூரத்தைதான் அவர்கள் கடந்து சென்றிருப்பார்கள். அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் அவரை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு மிக அருகில் சென்று துப்பாக்கியால் சுட்டனர். குண்டு நெற்றிப் பொட்டின் வலது புறத்தில் பட்டு மறு பக்கத்தில் வெளியேறி விட்டது. அந்த இடத்திலேயே அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

பத்து நிமிடங்கள் கழிந்த பிறகு இவர்களது மருமகனும் பெட்ரோல் பம்பிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் மக்கள் நின்று கொண்டிருப்பதையும் கூட்டம் அதிகமாக இருப்பதையும் பார்த்து இவர்களும் அங்கு நின்றார்கள். அப்போது அவர்களது மாமனார் அங்கு விழுந்து கிடைப்பதைப் பார்த்து உடனடியாக அவர்கள் ஆம்புலன்ஸை அழைத்தார்கள். ஆனால், ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்னதாகவே ஷஹீது அவர்கள் வஃபாத்தாகி இருந்தார்கள். முதலில் இவர்களது மருமகன் சாலை விபத்து நிகழ்ந்திருப்பதாகத்தான் கருதினார். பிறகு இரவில் ஓர் அஹ்மதி டாக்டர், ஷஹீது அவர்களைப் பார்த்த பிறகு இவரது நெற்றியில் குண்டு பாய்ந்துள்ளது என்று கூறினார். பிறகு மீண்டும் போலீஸிற்கு இது பற்றி கூறப்பட்டது. போஸ்ட் மார்டம் நடந்தது. பிறகு போலீஸும் இது ஒரு Tarket Killing ஆகும். அஹ்மதியா இருந்ததன் காரணமாக இவர் ஷஹீதாக்கப்பட்டுள்ளார் என்று கூறியது. பிறகு போலீஸ் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று குண்டுகளின் தடயங்களையும் எடுத்தனர்.

ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவர்களது தந்தையாரான முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் மூலமாக அறிமுகமானது. அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது கைகளில் பாகிஸ்தான் உருவாகுவதற்கு முன்னதாக அவர்கள் பைஅத் செய்திருந்தார்கள். 1947 –ல் அவர்களது குடும்பம் காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்து பாகிஸ்தானிலுள்ள மியான்வாலிக்கு வந்தது. ஷஹீது அவர்கள் பக்கரில் 1955 –ல் பிறந்தார்கள். அங்கு தனது கிராமத்தில் இவர்கள் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார்கள். பிறகு ரப்வாவிலுள்ள சினியோட்டில் அஹ்மது நகரில் இவர்கள் தொடர்ந்து கல்வி கற்று வந்தார்கள். இதற்குப் பிறகு சிறிது காலம் தர்பேலா டேமில் இவர்கள் வேலை செய்து வந்தார்கள். பிறகு சிறிது காலம் அவர்கள் துபாய்க்குச் சென்றார்கள். அங்கிருந்து திரும்பி வந்த பிறகு கராச்சியில் இருந்து வந்தார்கள். அங்கு கார் போன்றவற்றில் தொழில் செய்து வந்தார்கள். 1985 –ல் கராச்சியின் மோசமான நிலைமைகளின் காரணமாக கான்பூருக்கு இடம்பெயர்ந்து வந்தார்கள். அங்கு தனது பெட்ரோல் பம்பை அவர்கள் உருவாக்கினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் ஷஹீது மர்ஹூம் வஸிய்யத் செய்தவராவார். ஷஹாதத் நிகழ்ந்த சமயத்தில் அவர்களுக்கு வயது 62 ஆகும். பல்வேறு பொறுப்புகளில் இருந்தவாறு தொண்டாற்றும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்திருக்கின்றது. 3 வருடங்கள் வரை கான்பூர் ஜமாஅத்தின் தலைவராக இவர்கள் இருந்தார்கள். ஒரு நீண்ட காலம் வரை உமூரே ஆமா செயலராகத் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. எண்ணற்ற சிறப்பம்சங்கள் இவர்களிடம் இருந்தன. மிகவும் கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவராகவும் சிரித்த முகத்துடன் காணப்படும் மனிதராகவும் இவர்கள் இருந்தார்கள். மற்றவர்களையும் இவர்கள் மகிழ்ச்சியுடன் வைத்திருந்தார்கள். எந்த ஜமாஅத் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும் முழுமையாக உழைத்தவாறும் ஆர்வத்துடனும் தமது பொறுப்பை நிறைவேற்றி வந்தார்கள். கான்பூரிலுள்ள ஜமாஅத் பள்ளிவாயிலைக் கண்காணித்து வந்தார்கள். பள்ளிவாயிலைச் சுத்தம் செய்தவற்கான ஏற்பாட்டைச் செய்வது, செடிகளை நடுவது ஆகியவற்றை தனது செலவில் அவர்கள் செய்து வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். குடும்பத்தில் உள்ளவர்களது சந்தாக்களையும் முறையாக தொடர்ந்து செலுத்தி வந்தார்கள். கொடுக்கல் வாங்கலில் எப்போதும் நேர்மையுடன் நடந்து கொள்வார்கள். தொழுகைகளை எப்போதும் பேணி வந்தார்கள். கிலாஃபத்துடன் மிகுதியான தொடர்பு இருந்தது. கிலாஃபத்துடன் ஒன்றியிருக்குமாறு தமது பிள்ளைகளுக்கும் அவர்கள் போதனை செய்து வந்தார்கள். இவர்களுக்கு மனைவியுடன் இரண்டு மகன்களும் ஒரு மகளும் இருக்கின்றார்கள். அல்லாஹ் ஷஹீதின் தகுதிகளை உயர்த்துவானாக. இவர்களது சந்ததிகளையும் எப்போதும் அஹ்மதிய்யத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களாக அவன் ஆக்குவானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய பேராசிரியை தாஹிரா பர்வீன் மலிக் சாஹிபா உடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய முஹம்மது

மலிக் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகளாவார்கள். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் இவர்கள் பேராசிரியையாக பணிபுரிந்து வந்தார்கள். இவர்களையும் இவர்கள் பணிபுரிந்த பல்கலைக்கழகத்தில் வேலை செய்து வந்த ஒரு நபர் கத்தியால் குத்தி ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி ஷஹீதாக்கி விட்டார். திருடும் நோக்கத்தில் அந்த நபர் வந்திருந்தாலும் இவர்கள் அவரை பார்த்து விட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும் அவரை கொலை செய்து விட்டார். ஆனால், பாகிஸ்தானில் அஹ்மதியாக இருப்பது நீங்கள் யாரையும் கொல்லலாம். உங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்ற லைசன்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாகத்தான் வேலை செய்து வந்த அவருக்கு துணிச்சல் உருவானது. நான் பிடிபட்டு விட்டேன் என்பதை அவர் பார்த்ததும் இவர்கள் வீட்டில் தனியாகத்தான் இருந்தார். அவரை கத்தியால் குத்தி அவரை ஷஹீதாக்கி விட்டார்.

இவர்களது கணவர் மற்றும் அவரது குடும்பம் ஜமாஅத்தை விட்டு விட்டு விலகிச் சென்று விட்டது. அப்போதிருந்தே இவர்கள் தமது கணவரை விட்டுப் பிரிந்து தனியாக இருந்து வந்தார்கள். மிகவும் தகுதியுள்ள பெண்ணாக அவர்கள் இருந்தார்கள். கடந்த வருடம் ஓய்வு பெற்ற பிறகும் கூட பல்கலைக்கழகம் இவரிடம் இருந்த தகுதியின் காரணமாக இவரை மீண்டும் பணியில் அமர்த்தியது. இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்களது தாத்தாவான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி மர்ஹூம் மலிக் ஹஸன் முஹம்மது சாஹிப் அவர்கள் மூலமாக அறிமுகமானது. இவர்களது தந்தையாரான மலிக் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களும் வாழ்வை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தவர் ஆவார். மிக நீண்ட காலம் வரை பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றுவதற்கும் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் மார்க்கக் கல்வியைக் கற்றக் கொடுப்பதற்கான நல்வாய்ப்பும் இவர்களுக்கு கிடைத்தது. மிகவும் அதிகமாக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. பாகிஸ்தான் நிறுவப்பட்ட காலத்தில் இவர்களது தந்தையாருக்கு பாதுகாப்புத் துறையில் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. 1953 –ல் இவரது தந்தை கைதியாகவும் இருந்து வந்தார். மிகவும் தகுதியுள்ள பெண்ணாக இவர்கள் இருந்தார்கள். ரப்வாவில் ஆரம்பக் கல்வியை இவர்கள் கற்றார்கள். பிறகு லாஹூரிலுள்ள பெண்கள் கல்லூரியில் B.Sc. படித்தார்கள். பிறகு பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் M.Sc. படித்து முடித்தார்கள். பிறகு கலிபோரியாவிலிருந்து இவர்கள் Botany and Plant Science –ல் M.Phil. படித்து முடித்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூமாவை மன்னித்து அவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவரது தகுதிகளை உயர்த்துவானாக. இவர்களது மகளும் தனது தந்தையுடன் ஜமாஅத்தை விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். இதனால் அவர்களுக்கு எப்போதும் இந்த துக்கம் இருந்து வந்தது. அல்லாஹ் அவரது மகள் மீண்டும் ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இவர்கள் செய்த துஆக்கள் இவர்களது மகளுக்கு கிடைக்கட்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று இவர்களுக்கும் தொழுகைக்குப் பிறகு நான் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

# அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு

தஹ்ரீகே ஜதீதின் தோற்றுனர் ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு பற்றி இவ்வாறு கூறினார்கள்:

*“நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்பினால் தஹ்ரீகே ஜதீதிற்கேற்ப செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிலிருந்து பயன் பெற விரும்பினால் நோன்புகளிலிருந்து சரியான பயனைப் பெற வேண்டும். தஹ்ரீகே ஜதீது என்பது எளிமையான வாழ்க்கையை வாழ்வதும் உழைப்புடனும் கஷ்டங்களைச் சகிப்பதும் தியாகம் செய்வதற்கு தன்னைத்தானே பழக்கப்படுத்திக் கொள்வதும் ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே ரமலான் வந்திருக்கின்றது. எனவே, எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்துள்ளதோ, அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்..... ஒவ்வொரு நபரும் அவரது ரமலான் தஹ்ரீகே ஜதீதுடையதாகவும் அவரது தஹ்ரீகே ஜதீது ரமலானுடையதாகவும் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது நஃப்ஸை அழிக்கக் கூடியதாகவும் தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்வூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எனவே, நான் ரமலானிலிருந்து பயனடையுங்கள் என்று கூறும்போது நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ரமலானின் ஒளியில் புரிந்து கொள்ளுங்கள் என்பதையே உண்மையில் நான் உங்களுக்குப் புரிய வைத்துள்ளேன். தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறும்போது வேறு சொற்களில் நான் உங்களுக்கு நீங்கள் எல்லா நிலையிலும் ரமலானின் நிலைமையை உங்களிடம் ஏற்படுத்துங்கள் என்றே கூறுகின்றேன். சரியான தியாகத்தை தொடர்ந்து செய்கின்ற பழக்கத்தை உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகம் இல்லாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது ரமலான் அல்ல. மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியூட்டாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல.”* (ஜுமுஆ குத்பா 4 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று நிகழ்த்திய குத்பா பேருரையின் இறுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்திடம் தஹ்ரீகே ஜதீதிற்காக சந்தா செலுத்துபவருக்கு குறிப்பாக துஆ செய்யுமாறு வேண்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

*“ரமலானின் இறுதிப் பத்து நாட்கள் வரவிருக்கின்றது. இந்த நாட்களை தஹ்ரீகே ஜதீது தொடர்பாக செய்யப்பட்டுள்ள கடந்த கால தியாகங்களுக்காக நன்றி செலுத்துவதற்கும் இனி வருங்காலத்தில் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவிடுங்கள். எவர்களுக்கு கடந்த வருடங்களில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றதோ அவர் இதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள். துஆ செய்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் தியாகம் செய்கின்ற ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதாவது, மார்க்கத்தின் எழுச்சிக்காகவும் இயக்கத்தின் வலிமைக்காகவும் செய்த தியாகத்தின் விளைவாக அல்லாஹ் அவர் மீது தனது அருளையும் கருணையையும் இறக்க வேண்டும். எத்தகைய கலப்பற்ற மனத்தூய்மையுடனும் அன்புடனும் அவர் இறைவனின் வழியில் தியாகம் செய்தாரோ அதற்கேற்ப அவர் மீது தனது அன்பையும் அருள்களையும் இறக்குவாயாக! ஆமீன் என்று துஆ செய்ய வேண்டும்.”* (அல் ஃபஸ்ல் 15 நவம்பர் 1938, பக்கம் 4)

*அல் ஃபஸ்ல் நாளிதழில் 29 நவம்பர் 1938 –ல் வெளியிடப்பட்ட அறிவிற்கேற்ப ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் ஆரம்பத்திலிருந்தே இதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதாவது அவர்கள் எப்போதும் ரமலானின் முதல் பதினைந்து நாட்களுக்குள் தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக அவர்கள் செய்திருந்த வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவாறு அல்லாஹ்வின் அருள்களையும் பரக்கத்துகளையும் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கின்றனர். எனவே, இப்போது நாம் அல்லாஹ் வழங்கியுள்ள நல்வாய்ப்பிற்கேற்ப மீண்டும் ஒருமுறை எண்ணற்ற வானத்தின் கருணைகளையும் பரக்கத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்தப் புனித மாதத்தில் அடி எடுத்து வைக்க இருக்கின்றோம். தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு நல்குகின்ற அனைவரிடமும் அவர்கள் தங்களது மகத்தான ஜமாஅத்தின் மரபுகளை நிலைத்து நிற்கும்படி செய்தவாறு அருளுக்குரிய ரமலானின் 20 –வது நாள் அதாவது ஜூன் 17 ஆம் தேதிக்கு முன்னதாக தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாகச் செலுத்தி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து முழுமையான பங்கைப் பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!*

அனைத்து மாவட்ட மற்றும் உள்ளூர் அமீர்கள், தஹ்ரீகே ஜதீது செயலர்கள், பொறுப்புப் பிரச்சாரகர்கள் ஆகியோரிடம் நாம் கேட்டு கொள்வது என்னவென்றால், **தயவுசெய்து தத்தமது ஜமாஅத்துகளில் உள்ள சகோதர சகோதரிகளில் தமது தஹ்ரீகே ஜதீது சந்தாவை நூறு சதவிகிதம் முழுமையாக செலுத்தியவர்களின் பட்டியலை ஜூன் 17 ஆம் தேதிக்கு முன்னதாக தபால் மூலமும் மற்றும் ஜூன் 23 ஆம் தேதிக்கு முன்னதாக Fax மூலமாகவோ அல்லது Email மூலமாகவோ வகாலத்தே மால் தஹ்ரீகே ஜதீது காதியான் அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.** இதனால் எல்லா ஜமாஅத்துகளின் ஒட்டுமொத்த பட்டியலை 29 ரமலானில் நடக்கும் கூட்டுத் துஆவிற்காக ஸய்யிதுனா ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். ஜஸாக்குமுல்லாஹுத்தஆலா கைரா.

(வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது, காதியான்)

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 8 JUNE 2017 Issue No. 23

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

# ரமலானின் அருள்களில் வக்ஃபே ஜதீதும் வக்ஃபே ஜதீதின் அருள்களில் ரமலானின் அருள்களும் உள்ளன

ஒருமுறை மீண்டும் நாம் எண்ணற்ற வானத்தின் கருணைகள் மற்றும் அருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அருளுக்குரிய ரமலானின் புனித மாதத்தில் நாம் நுழைவது நமது நற்பாக்கியமாகும். அல்ஹம்துலில்லாஹ்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் 1998 -ல் வக்∴பே ஜதீதின் புதிய வருடத்தைப் பற்றிய அறிவிப்பைச் செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ இது ரமலான் மாதமாகும். உண்மையில் வக்∴பே ஜதீதிற்காக நான் கூற ஆரம்பித்த இந்தக் கருத்தை இப்போது நான் ரமலானுடன் இணைக்க விரும்புகின்றேன். அதன் மூலமாக ரமலானின் அருள்களில் வக்∴பே ஜதீதும் வக்∴பே ஜதீதின் அருள்களில் ரமலானின் அருள்களும் சேர்ந்து விடும்.”

மேலும் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர் -களுக்கு நற்செய்தி வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். ஒவ்வொரு விடியற்காலையிலும் இரண்டு மலக்குகள் இறங்குகின்றனர். அவர்களில் ஒருவர் அல்லாஹ்வே! செலவு செய்கின்ற வள்ளலுக்கு மேலும் வழங்குவாயாக! மேலும் அவரது அடிச்சுவட்டில் செல்கின்ற பலரையும் உருவாக்குவாயாக என்று கூறுகின்றார். மற்றவர், அல்லாஹ்வே! தடுத்து வைத்துக் கொள்கின்ற கருமியை அழித்து விடுவாயாக! அவரது பொருளையும் செல்வத்தையும் அழித்து விடுவாயாக! என்று கூறுகின்றார். இதில் முதல் பகுதி மிகத் தெளிவாக இருக்கின்றது. அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர்களுக்காக குறிப்பாக அருளுக்குரிய ரமலானில் மலக்குகள் துஆக்கள் செய்கின்றனர். மேலும், அவர்களது அடிச்சுவட்டில் செல்கின்றவர் -களுக்காகவும் துஆக்கள் செய்கின்றனர். எனவே, நீங்கள் உங்களது நன்மைகளில் உங்கள் குழந்தைகளையும் பங்கு பெற வையுங்கள். உங்களுக்கு அருகில் இருப்பவர்களையும் உங்களது சுற்றுச் சூழலில் இருப்பவர்களையும் இந்த நன்மைகளில் பங்கு பெற வையுங்கள். அதன் மூலமாக நன்மைகள் பற்றிய இந்தக் கருத்து பூக்களாக மலர்ந்து முழு உலகையும் சூழ்ந்து கொள்ள வேண்டும். இது எத்தகைய செயலாக இருக்கின்றது என்றால், அது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வீசும்படி செய்யப்படுகின்ற காற்றுகளின் திசையில் இருக்கும். மலக்குகள் துஆக்கள் செய்வர். நீங்கள் முன்னேறிச் செல்வீர்கள். மிகவும் வேகமாக இறைவன் தனது அருள்களால் இறைவனின் வழியில் செலவு செய்பவர்களின் பொருளில் பரக்கத்தை வழங்குவான். இந்த அருளின் முன்மாதிரிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். முழு உலகிலும் இவ்வாறு செலவு செய்பவர்களுக்கு அல்லாஹ் மேலும் வழங்கிக் கொண்டிருக்கின்றான். அவர்களைப் போன்றவர்களை மேலும் உருவாக்குகின்றான். இதன் விளைவாக அஹ்மதிய்யத்திற்கு அதிகமாக ஏற்படும் சுமைகளை எளிதாக சுமக்க முடிகின்றது.” (2 ஜனவரி 1998 -ல் இலண்டனிலுள்ள ∴பஸ்ல் பள்ளிவாயிலில் நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து)

கடந்த வருடங்களைப் போன்றே இவ்வருடமும் அருளுக்குரிய ரமலானின் இறுதியில் வக்∴பே ஜதீது சந்தாவை முழுமையாக செலுத்துகின்ற நபர்களின் பெயர்கள் துஆவிற்காக ஹுஸுர் அவர்களுக்கு அனுப்பப்படு -கிறது. எனவே, ஸய்யிதுனா ஹுஸுர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும். துஆக்களில் இருந்து முழுமையான பங்கைப் பெறுகின்ற நற்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன். எல்லா ஜமாஅத் பொறுப்பாளர் -களும் கண்ணியத்திற்குரிய முபல்லிக்குகளும் முஅல்லிம்களும் இந்த அருளுக்குரிய மாதத்தில் வக்∴பே ஜதீது சந்தாவை முழுமையாக செலுத்தும் ஜமாஅத்திலுள்ள நபர்களின் பட்டியலை அதற்கென்று அனுப்பட்டுள்ள படிவத்தில் எழுதி தயார் செய்து ரமலான் மாதத்தின் 25 -ஆம் தேதிக்குள் இந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். அல்லாஹ் நம் அனைவருக்கும் தத்தமது வாக்குறுதிகளைக் கவனமாக ஆய்வு செய்து பார்த்து முடிந்தவரை தமது பொறுப்புகளை அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு நிறைவேற்றி ஹுஸுர் அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை விடவும் அதிகமாக வக்∴பே ஜதீதிற்கான இலக்கை விரைவில் பூர்த்தி செய்யக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

(நாஸிம் வக்∴பே ஜதீத் - இந்தியா)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

அறிவற்றவர்களே ! எவர் குருடராய் இருக்கின்றாரோ அவர் எவ்வாறு உங்களுக்கு வழி காட்டுவார் ? உண்மையான தத்துவஞானம் பரிசுத்த ஆன்மாவின் மூலமே கிடைக்கின்றது. இதற்கான வாக்குறுதி உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. பிறர் அடையாத அந்த பரிசுத்த ஞானங்கள் வரை, அத்தூய்மையான ஆன்மா மூலமாக நீங்கள் கொண்டு செல்லப்படுவீர்கள். அதனை நீங்கள் உண்மையாகவே வேண்டினால் இறுதியில் நீங்கள் அதனைப் பெற்றுக் கொள்வீர்கள். அப்போது இந்த ஞானம்தான் உங்கள் மனத்திற்கு புத்துணர்வையும், வாழ்வையும் அளிக்கக் கூடியது என்றும் திட நம்பிக்கையின் உச்சநிலை வரை உங்களை எடுத்துச் செல்லக் கூடியது என்றும் நீங்கள் நிச்சயமாக அறிந்து கொள்வீர்கள். தாமே பிணத்தை தின்பவர் உங்களுக்கு எங்கிருந்து தூய்மையான உணவை கொண்டு வருவார் ? தாமே குருடராய் இருக்கின்றவர் உங்களுக்கு எவ்வாறு வழிகாட்டுவார் ? ஒவ்வொரு பரிசுத்தமான ஞானமும் வானத்திலிருந்தே வருகிறது. ஆகவே நீங்கள் இவ்வுலகப் பற்றுள்ளவர்களிடம் எதனை எதிர்பார்க்கிறீர்கள் ? எவர்களின் ஆன்மாக்கள் வானத்தை நோக்கிப் போகின்றனவோ அவர்களே அந்த ஞானங்களுக்கு உரியவர்களாவர். தம்மில் மன அமைதி அடையாதவர்கள், உங்களுக்கு எவ்வாறு மன அமைதியையும் நிம்மதியையும் அளிக்க முடியும் ? ஆனால் முதலில் உங்களது உள்ளம் பரிசுத்தமடைவது அவசியமாகும். அத்துடன் உண்மையிலும் தூய்மையிலும் நீங்கள் நிலை கொள்வதும் முக்கியமானதாகும். இதன் பிறகே இவையெல்லாம் உங்களுக்கு கிடைக்கும்.

(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 23-24)

# புத்தகக் கண்காட்சி

முன்னேற்றம் பதிப்பகம் மற்றும் தமிழ் வாசகர் மன்றம் இணைந்து நாகர்கோவிலில் கோட்டாறு முத்து மஹால் மண்டபத்தில் ஏப்ரல் 4 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை 11 நாட்கள் புத்தகக் கண்காட்சியை நடத்தியது. 35 அரங்குகள் அமைத்து 35 பதிப்பகங்கள் இதில் கலந்து கொண்டன. கோட்டாறு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இக்கண்காட்சியில் கலந்து கொண்டது. மேலும் இந்த ஜமாஅத் மட்டும்தான் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்ட ஆன்மீக அமைப்பாகும்.

எங்கள் அரங்கில் தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மார்க்க நூல்கள் இடம்பெற்றிருந்தன. 22 மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் இடம்பெற்றிருந்தது. 5000 மக்களுக்கு இலவசகமாக பிரசுரங்களும் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

700 –க்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன. நமது கிருஷ்ணர், இயேசு மரித்தது எங்கே? ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை, திருக்குர்ஆன், இறை தியானம், சிலுவை மரணம் போன்ற புத்தகங்கள் அதிக அளவில் விற்பனையாயின.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எழுதிய உலக அமைதிக்கு இஸ்லாம் கூறும் வழிகாட்டல்கள், உலகை எதிர்நோக்கி இருக்கும் மூன்றாம் உலகப்போர் மற்றும் உலக அமைதிக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் ஆற்றி வரும் அரும்பணிகள் ஆகிய 3000 –ற்கும் மேற்பட்ட புத்தகங்கள், பிரசுரங்கள் இலவசமாக கொடுக்கப்பட்டன.

முக்கிய பிரமுகர்களின் வருகை: மாவட்ட ஆட்சியர் சஜ்ஜர்சிங் சவான் – உதவி மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர், அரசு முதன்மை பொறியாளர், இந்தியா டுடே, இந்தியன் எக்ஸ்பிரஸ், தி இந்து, மாலை மலர், தினத்தந்தி போன்ற பத்திரிகைகளின் நிருபர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்கள், பல்வேறு மத மார்க்க அறிஞர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்கள், வங்கி அதிகாரிகள், மாவட்ட காவல்துறை முதன்மை ஆய்வாளர் ஆகியோர் நம் அரங்கிற்கு வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

LED TV, அரங்கில் பொருத்தப்பட்டு உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சுற்றுப்பயணம் செய்த விவரங்கள் பல்வேறு பாராளுமன்றத்தில் உலக அமைதியை வலியுறுத்தி அவர்கள் ஆற்றிய உரைகள், உலக நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆற்றி வரும் சமுதாய நலத் தொண்டுகள் இவைகள் குறித்த வீடியோ காட்சிகள் பொதுமக்களுக்கு காட்டப்பட்டன.

வாசகர் கருத்து: புத்தகக் கண்காட்சி நிறைவடைந்த அடுத்த நாள் ஞாயிறு அன்று வழக்கறிஞர் கவுதம் என்பவரும், பிரபல எழுத்தாளரும் எங்கள் ஜமாஅத்தின் பள்ளிவாயிலுக்கு வருகை தந்தனர். நாம் நடத்திய புத்தகக் கண்காட்சியை அவர்கள் வெகுவாகப் பாராட்டினர். பிற முஸ்லிம்கள் இந்துக்களை காஃபிர்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் நீங்கள் மாற்று மதத்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மத நல்லிணக்கத்திற்கு மிகச்சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றீர்கள். உங்கள் ஜமாஅத் வெளியிட்ட இஸ்லாமும் மார்க்க சுதந்திரமும் என்ற நூல் எங்களை மிகவும் கவர்ந்தது என்று கூறினார்கள். நாங்களும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராக இருக்கின்றோம் என்று உறுதி கூறினர்.

இறைவன் அருளால் கோட்டாறு ஜமாஅத் சகோதரர்களும், தமிழ்நாட்டின் இதர ஜமாஅத்துகளின் சகோதரர்களும் மிகச் சிறப்பான முறையில் இந்தக் கண்காட்சிக்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்கினார்கள். எல்லாப்புகழும் இறைவனுக்கே!

(தகவல்: M. மன்சூர் அஹ்மது, இஷாஅத் செயலர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad